**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ஆம் நாள் திங்கட்கிழமை**

**இடைக்கால மனு எண். 6/2026**
**இன்**
**அசல் வழக்கு எண். 70/2018**

கண்ணன் ..... மனுதாரர்/வாதி

**/ எதிர் /**

1.முருகன்
2.தவமணி
3.கார்த்திக்
4.அய்யனார்
5.ராமச்சந்திரன்
6.சுந்தரலிங்கம்
7.சண்முகப்பிரியா ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என்முன்பு 02.04.2026 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரார் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ஹபீபுர் ரஹ்மான் அவர்கள் ஆஜராகியும், 1, 2, 4, 5, 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.ராஜகோபால் அவர்கள் ஆஜராகியும், 3, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ள நிலையில், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1.** மனுதாரர் தரப்பில் CPC Order 18 Rule 17 ன் படி வா.சா.1 ஆகிய தன்னை மீண்டும் விசாரிக்க **Re-call** செய்து ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதி வேண்டி அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர் தரப்பில் சாட்சி விசாரணைக்கு வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், தனது தரப்பில் தாக்கல் செய்ய வேண்டிய சில முக்கிய ஆவணங்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றதாகவும், மேற்படி ஆவணங்கள் மூலம் தனது வழக்கை நிரூபிக்க இயலும் என்றும், மேற்படி ஆவணங்களை தனது தரப்பில் தாக்கல் செய்து குறியீடு செய்ய வேண்டியிருப்பதால், தன்னை மீண்டும் அழைத்து (**Re-call)** விசாரணை செய்து ஆவணங்களை குறியீடு செய்ய ஏதுவாக தாவா மனுவை அனுமதியளித்திட வேண்டும் என்று மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை விசாரணையின் போது ஏன் தாக்கல் செய்யவில்லை என்பதை பற்றி தெளிவான விளக்கம் இல்லாமல் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடிக்குரியது என்றும், தாவா வழக்கில் வா.சா.1 விசாரணையின் போது உரிய வாய்ப்புகள் அளிக்கப்பட்டு விசாரணை முடிந்த பிறகு வழக்கை இழுத்தடிப்பதற்காக பொய்யான சங்கதிகளை கூறி மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே தாவா மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4) மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-**

மனுதாரார் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தகுந்த நிலையில் இல்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இருதரப்பு வாதங்கள் கேட்டு முடிவு செய்ய வேண்டும் என்பதாலும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

> "Audi alteram partem is a Latin phrase meaning 'listen to the other side', or "let the other side be heard as well". It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them."

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் தாவா மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.06 17:14:09 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

<u>**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**</u> இல்லை

<u>**எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:**</u> இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.06 17:14:22 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**District Munsif Court**

**Manamadurai**

**IA.No.6/2026**

**in**

**OS.No.70/2018**

**Order**

**Dated 06.04.2026**